# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1876/40 - 2014 අගෝස්තු මස 22 වැනි සිකුරාදා - 2014.08.22

*1876/40 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*ச.அ.இல.: சிஎஸ்ஏ/7/8/15*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அதியுத்தமராம்**
**மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால்**

முத்திரை

மஹிந்த ராஜபக்ஷ.

1. திருவாளர் மெக்ஸ்வெல் பராக்கிரம பரணகம அவர்கள்
2. திருமதி திமின்கு படதுருகே பிரியந்தி சுரஞ்ஜனா வித்யாரத்ன அவர்கள்
3. திருமதி மனோ இராமநாதன் அவர்கள்

ஆகியோருக்கு

வாழ்த்துக்கள் !

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (393 ஆம் அத்தியாயம்) 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதிய ஆணைப்பத்திரத்தின் மூலம் விசாரணை ஆணைக்குழுவொன்றை தாபித்துள்ளதாதலாலும் ,

அத்துடன் 2014, மாச்சு மாதம் 21 ஆந் திகதி மற்றும் 2014, யூலை மாதம் 14 ஆந் திகதிய ஆணைப்பத்திரங்களின் மூலம் சொல்லப்பட்ட மூல ஆணைப்பத்திரத்தில் திருத்தங்களும் மற்றும் சேர்ப்புக்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாதலாலும்,

அத்துடன், மேற்கூறிய 2014, யூலை மாதம் 14 ஆந் திகதிய ஆணைப்பத்திரத்தின் மூலம் ஆணைக்குழுவின் ஆலோசனைச் சபையொன்றில் சேவையாற்றுவதற்காக சர்வதேச நிபுணர்கள் மூவர் என்னால் நியமிக்கப்பட்டு, மேலும் தேவைக்கேற்றவாறு நிபுணர்கள் நியமிக்கப்படலாமென சொல்லப்பட்ட ஆணைப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாதலாலும்,

அதற்கமைய மேலும் நிபுணர்களை நியமிக்க வேண்டிய தேவை இனங்காணப்பட்டுள்ளதாதலாலும்,

சொல்லப்பட்ட ஆலோசனைச் சபையில் சேவையாற்றுவதற்காக பின்வரும் சர்வதேச நிபுணர்களை நான் இத்தால் நியமிக்கின்றேன்.

1. அவிதாஷ் கௌஷால் அவர்கள்
2. அஹமர் பிலால் சுபி அவர்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலச்சினையின் கீழ் இரண்டாயிரத்து பதின்நான்காம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆம் நாளன்று, கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

லலித் வீரதுங்க,
சனாதிபதியின் செயலாளர்.

9- 200




இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.